**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண் 216/2015</u>**
**<u>மற்றும்</u>**
**<u>அசல் வழக்கு எண் 98/2018</u>**
**<u>நாள் 06/12/2024 வெள்ளிக்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சேகர் குருக்கள் | த/பெயர் – ராமநாத குருக்கள் |
| வயது – 65 | தொழில் – |
| விலாசம் – சிவன் கோயில் தெரு, பெருவாயல் கிராமம், கும்மிடிப்பூண்டி | |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

தாவா கோயிலை ஆரம்பத்தில் யாா் நிர்வாகம் செய்யவேண்டும் என்பதற்கும் ஒருவரின் நிர்வாகம் முடிவிற்கு பிறகு வேறு யாா் அறக்கட்டளையை நிர்வாகம் செய்யவேண்டும் என்பது குறித்து எழுத்து மூலமான ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை 1950 முதல் அவர் இறக்கும் வரை தாவா கோயிலை நிர்வாகம் செய்துவந்தார். எனது தந்தை 25.02.2004 ல் இறந்துவிட்டார். அதன் பிறகு நான் இந்து அறநிலைய துறையில் எம்.பி. 288/2008 என்ற மனுவை தாக்கல் செய்தேன். மேற்படி மனுவில் நான் மேற்படி கோயில் நிர்வாகத்தை எடுத்து நடுத்த அனுமதி கோரியிருந்தேன்.

மேற்படி மனுவில் எனது அண்ணன் கிருபானந்த குருக்கள் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். மேற்படி மனுவின் உத்தரவில் நான் தாவா கோயிலை நிர்வாகம் செய்து கொள்ளளாம் என் உத்தரவி பிறப்பிக்கப்பட்டது. மேற்படி மனு தாக்கல் செய்து உத்தரவிட்ட விவரம் எனது அண்ணன் கிருபானந்த குருக்களுக்கு தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுவில் பரம்பரை அறங்காவலர் என்பதன் அடிப்படையில் தான் நிர்வாகம் செய்ய அனுமதி கோரியிருந்தேன். மேற்படி மனுவில் ஏற்ப்பட்ட உத்தரவை எதிர்த்து எனது அண்ணன் எ.பி. 54/2010 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். கிருபானந்த குருக்கள் தாக்கல் செய்த மனுவில் நாங்கள் இருவரும் சேர்ந்து மேற்படி கோயிலை நிர்வாகம் செய்யவேண்டும் என்று 03.07.2014 ல் உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, மேற்படி மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள் மீண்டும் மேற்படி மனுவை மறுவிசாரணை செய்யவேண்டும் என்று எனது அண்ணன் கேட்டுக்கொண்டதன் பெயரில் மேற்படி மனு மறுவிசாரணைக்கு எடுக்கப்பட்டு எனது தரப்பபை கேட்காமல் நாங்கள் இருவரும் சேர்ந்து நிர்வாகம் செய்யவேண்டும் என்று உத்தரவு வழங்கினார்கள். மேற்படி உத்தரவு தான் 03.07.2014 ல் வழங்கப்பட்ட உத்தரவு. எனது அண்ணன் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. 03.07.2014 தேதியிலான உத்தரவில் நாங்கள் இருவரும் பரம்பரை அறங்காவலர் என்றும் எனவே இருவரும் சேர்ந்து தான் தாவா கோயிலை நிர்வாகம் செய்யவேண்டும் என்று கூறியிருந்தார்கள் என்றால் சரிதான்.

எ.பி. 54/2010 என்ற மனுவில் ஏற்ப்பட்ட உத்தரவை தவறானது என்று கூறி நான் எ.பி. 38/2014 மனுவை தாக்கல் செய்தேன். மேற்படி மனுவில் எனது தந்தை எனக்கு உயில் எழுதி வைத்துள்ளதாகவும் அதில் நான் மட்டுமே பரம்பரை அறங்காவலர் என்பதன் கீழ் தாவா கோயிலை நிர்வாகம் செய்ய உாிமை வழங்கியதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எ.பி. 38/2014 மனு சரியானதல்ல என தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் மேற்படி மனுவை தாக்கல் செய்தேன் என்பது உண்மை ஆனால் அதில் என்ன உத்தரவு ஏற்ப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த மனுவில் உயில் வழியாக தாவா கோயில் நிர்வாகத்தை வழங்க இயலாது என்பதால் முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையிலேயே அவ்வாறு ஒரு உயில் ஏற்ப்பட்டிருந்தால் நான் முதன் முதலில் தாக்கல் செய்த எம்.பி 288/2008 மனுவிலேயே அதனை கூறியிருப்பேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் உயிலை பற்றி கூறியுள்ளேன். அவ்வாறு ஒரு உயில் இருப்பது எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் அவர் உயில் எழுதுவதற்கு முன்பாகவே மேற்படி கோயில் நிர்வாகத்தை நான் தான் செய்யவேண்டம் என கூறியிருந்தார். உயில் எழுதிய விவரத்தை உயில் எழுதிய உடனே எனது தந்தை என்னிடம் கூறினார். என் படி எம்.பி 288/2008 மனுவிலேயே உயிலின் அடிப்படையிலேயே கோயில் நிர்வகிக்கும் உாிமையை கோரியிருந்தேனா என்றால் ஆமாம்.

எம்.பி 288/2008 மனுவில் உயில் வழி உரிமை கோருவதாக எங்கேயும் குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 35 ஆண்டுகளாக கோயிலை நிர்வாகம் செய்து வருகிறேன். எனது தந்தை 56/1981 என்ற ஒரு மனுவை இந்து அறநிலைய துறையில் தாக்கல் செய்தார். மேற்படி மனுவில் 07.12.1984 ல் பரம்பரை அறங்காவலர் என்ற அடிப்படையில் கோயில் நிர்வாகத்தை எனது தந்தை செய்து கொள்ளலாம் என உத்தரவானது. மேற்படி உத்தரவு தான் பரம்பரை அறங்காவலர் என்பதின் தோற்றம் என்றால் அதற்கு முன்பாகவே இருந்து வந்தது. எனது தந்தை 1977 முதல் சாலை விபத்து ஏற்ப்பட்டடு உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். எனது தந்தை 1977 ல் உடல் நிலை சரியில்லாமல் இருந்திருந்தால் அவர் என்னை தான் அறங்காவலராக இருக்க அனுமதி கேட்டு மனு செய்திருப்பார் என்றாலும் எனது தந்தை இறக்கும் வரை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தான் இருந்தார் என்றால் சரியல்ல. முதலில் எனது தந்தையையும் பிறகு என்னையும் பிறகு நான் மற்றும் எனது சகோதரரும் சேர்ந்து கோயில் நிர்வாகத்தை செய்யவேண்டும் என்று உத்தரவிட்டது இந்து அறநிலைய துறை என்றால் சரிதான். மேற்படி தீர்வு அளிக்க தகுதியான அதிகாரி இந்து அறநிலைய துறை என்பதால் தான் மேற்படி மனுக்களை அவர்களிடம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது அண்ணன் தாக்கல் செய்த மனுவின் மீது ஏற்ப்பட்ட உத்தரவின் மீது மேல்முறையீடு இந்து அறநிலைய துறையில் தான் தாக்கல் செய்யவேண்டும் என்பதால்

தான் மேற்படி மனுவையும் இந்து அறநிலைய துறையில் தாக்கல் செய்தேன். என் படி மேற்படி விசாரணை முறையாக செய்யப்படவில்லை என்பது தான் எனது குற்றச்சாட்டு ஆகும். எனவே மேற்படி மேல் முறையீட்டின் கீழ் ஏற்ப்பட்ட உத்தரவினை எதிர்த்து மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு தான் தாக்கல் செய்ய முடியுமே தவிர உரிமை நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் அது பற்றி தெரியாது. பரம்பரை பரம்பரையாக குடும்பத்தில் மூத்த ஆண் வாரீசு கோயில் நிர்வாகத்தை ஏற்று நடத்த வேண்டும் என்பது தான் ஏற்ப்பாடு என்றால் அது போல் எதுவும் இல்லை. என்படி யார் கோயில் நிர்வாகத்தை ஏற்று நடத்தவேண்டும் என்பது தொடர்பாக பரம்பரை ஏற்ப்பாடு இருந்தது. ஆனால், அந்த ஏற்ப்பாட்டின் விவரம் எனக்கு தெரியாது. அந்த ஏற்ப்பாடானது எனது தந்தைக்கு முன்பு இருந்த மூதாதையர்களால் ஏற்ப்பட்டது. எனவே ஆதி ஏற்ப்பட்டின் படி தான் கோயில் நிர்வாகம் செய்யப்படவேண்டுமே தவிர ஒரு வேலை எனது தந்தை உயில் எழுதியாக கூறுவது உண்மைஎன்று வைத்துக்கொண்டால் கூட அதன் அடிப்படையில் கோயிலை நிர்வாகிக்கும் உாிமையை கோர முடியாது என்றால் சரியல்ல. எனது அண்ணன் கிருபானந்த குருக்கள் என்மீது அசல் வழக்கு எண் 98/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். அதில் தனக்கும் நிர்வாகம் செய்ய உாிமை உள்ளது என்றும் அதனை தடை செய்ய கூடாது என பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்ற உத்தரவின் பெயரில் எந்த ஒரு உத்தரவு வழங்கினாலும் அதனை

ஏற்றுக்கொள்ள தாயாராக இருப்பதாக கூறியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கோயிலை வருமானத்திற்காக நிர்வாகம் செய்கிறேனா அல்லது சேவையாக செய்கிறேனா என்றால் கடவுள் சேவையாக செய்து வருகிறேன். அவ்வாறு கடவுள் சேவையாக செய்வதாக இருந்தால் எனது அண்ணனும் சேவை செய்வதில் எனக்கு ஆட்சேபனை இருக்காது என்றால் சரியல்ல. குடும்பத்தில் தொந்தரவுகள் இருப்பதால் எனக்கு ஆட்சேபனை உள்ளது. இந்தியன் வங்கி கும்மிடிப்பூண்டி கிளையில் கோயிலுக்கு கணக்கு உள்ளது. மேற்படி வங்கி கணக்கில் ரூபாய் 23 லட்சம் நிரந்தர வைப்பீடாக உள்ளது. மேற்படி வங்கி கணக்கு சேமிப்பு கணக்காகும். மேற்படி வங்கி கணக்கினை நான் தான் செயல்படுத்தி வந்தேன் தற்போது அதனை நிறுத்திவிட்டார்கள். மேற்படி வங்கி கணக்கில் வரவு செலவு அறிக்கையோ கோயில் நிர்வாகத்தின் ஆண்டு இறுதி அறிக்கையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கோயில் வங்கி கணக்கினை முறையாக பராமரிக்க வில்லை என்பதால் எனது சகோதரர் மேற்படி கணக்கின் செயல்பாட்டினை நிறுத்த பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி வங்கி கணக்கில் முறைக்கேடு இருப்பதாலும் அந்த முறைக்கேடு எனது அண்ணனுக்கு தெரிந்துவிடும் என்பதால் தான் அவரை நிர்வாகம் செய்ய அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கும் கோயில் நிர்வாகத்தை செய்ய சட்டபடி உரிமை உள்ளது என்றும் அதனை மறுத்து நான் எனது அண்ணனுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி

செய்யதக்கது என்றாலும் மேற்படி உாிமையை கோரி எனது அண்ணன் தாக்கல் செய்த வழக்கு அனுமதி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. மேற்படி உயில் நானே ஏற்ப்படுத்தியது என்றாலும் அந்த உயிலை எனது தந்தை எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**